Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 17 வெள்ளிக்கிழமை (31-01-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 65

## கொக்கட்டிச்சோலையில்

# 67 தமிழர்களின் படுகொலைக்கும்

# ஸ்ரீலங்கா இராணுவமே பொறுப்பு!

## அரசாங்கம் ஒப்புக் கொண்டது

கொழும்பு, ஜனவரி 31

மட்டக்களப்பு மாவட்டம் கொக்கட்டிச் சோலையில், கடந்த ஜூன் மாதம் ஆண்களும், பெண்களும், குழந்தைகளுமாக 67 அப்பாவித் தமிழ் மக்களை ஸ்ரீலங்கா இராணுவத்தினரே படுகொலை செய்தனர்.

—இவ்வாறு இப்படுகொலைகள் குறித்து விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக் குழு தனது இடைக்கால அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஸ்ரீலங்கா இராணுவம் மீது இவ்வாறு சுமத்தப்பட்டுள்ள குற்றத்தை முதல் முறையாக அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. ஆணைக் குழுவின் இடைக்கால அறிக்கையை அரசாங்க அறிக்கையாக வெளியிடவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

67 தமிழர்களும் படுகொலை செய்யப்பட்டதற்கு இராணுவத்தினரின் மட்டு மீறிய செயலே காரணம் என்று ஆணைக் குழு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோ

[2 ஆம் பக்கம் பார்க்க

## உதவும் நாடுகளைச் சமாளிக்கவே அரசு அறிக்கையை ஏற்றுள்ளது!

### பி. பி. சி. பேட்டியில் தகவல்

கொழும்பு, ஜன. 31

ஸ்ரீலங்கா அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து இலங்கைக்கு உதவும் நாடுகள் கவலை கொண்டுள்ளன. அவற்றைச் சமாளிக்கும் நோக்கத்துடன் தான் அரசாங்கம் கொக்கட்டிச்சோலை படுகொலை சம்பந்தமான ஆணைக்குழு அறிக்கையில் கூறப்பட்டிருப்பதை ஏற்றுக்கொண்டுள்ளது.

இவ்வாறு பி. பி. சி. தனது பேட்டி நிகழ்ச்சி ஒன்றில் தெரிவித்துள்ளது. திரு. அமல் ஜெயசிங்கா வழங்கிய அந்தப் பேட்டி பற்றிய முழு விவரமும் வருமாறு :-

கேள்வி : கடந்த ஆண்டு ஜூன் மாதம் கொக்கட்டிச் சோலையில் இலங்கை இராணுவம் வேண்டுமென்றே 67 பொதுமக்களைக் கொலை செய்ததாக ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையில் குற்றஞ் சாட்டியுள்ளது. பாதுகாப்புப் படையினரின் இச்செயலுக்கான பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டுள்ளதா ?

பதில் : உண்மையில் இது போன்ற ஜனாதிபதி ஆணைக் குழு ஒன்று இவ்வாறான விசாரணை நடத்த நியமிக்கப்பட்

[5 ஆம் பக்கம் பார்க்க]

## சைக்கிள்களில் வெடிகுண்டு; மூவர் பலி! 20 பேர் காயம்!!

### கல்முனை, காத்தான்குடிப் பகுதிகளில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஜன. 31

கல்முனை, காத்தான்குடிப் பகுதிகளில் நேற்று சைக்கிள்களில் வைக்கப்பட்டிருந்த குண்டுகள் வெடித்ததில் மூவர் உயிரிழந்தனர். சுமார் இருபது பேர் காயமடைந்தனர்.

காத்தான் குடியில் நேற்றுக் காலை பத்து மணியளவில் சனநெருக்கடி மிக்க இடத்தில் இரண்டு சைக்கிள்களில் பொருத்தப்பட்டிருந்த ''டைம்—பொம்'' கள் வெடித்ததில் மூன்று பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்தனர். இருபது பேர்வரை காயமுற்றனர்.

இதேவேளை இதே போன்ற ஒரு சம்பவம் கல்முனையிலும் இடம் பெற்றதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

சைக்கிளில் வந்த இருவரை பொலீஸார் சந்தேகத்தின் பேரில் சோதனையிட முயன்றதாகவும்—

அப்போது அவர்கள் சைக்

[2 ஆம் பக்கம் பார்க்க]

## கிழக்கு மக்களின் அவலம் ஐ. நாவின் கவனத்துக்கு!

### கனடா தூதுக்குழு அளித்த உறுதி

மட்டக்களப்பு, ஜன. 31

''கிழக்கு மாகாணத்தில் மக்கள் படும் இன்னல்களை ஐ. நாவில் உள்ள மனித உரிமைக்குழுவின் கவனத்துக்குக் கொண்டு செல்வோம்.''

—இப்படிக் கூறினார் கனடா மனித உரிமைகள் குழு உறுப்பினரும் கனடாவின் எம். பி.யுமான பீற்றர் எல். மக்கிறீற்.

மட்டக்களப்பு மாவட்ட மக்களைச் சந்தித்து, அவர்களின் நிலையைக் கேட்டறிந்த பின்னர் அவர் அங்கு வைத்து இப்படிக் கூறினார்.

மக்களுடான சந்திப்பில் அவர் கூறியதாவது;-

கண்ணீர் மல்கிக் கதறி அழும் தாய்மாரைச் சந்தித்து அவர்களது நிலைப்பாடுகளை அறிந்து கொண்டதோடு, அவர்களது சோக உணர்வுகளை பகிர்ந்துகொள்ளும் அனுபவத்தையும் நாங்கள் இங்கு வந்ததால் பெற்றுக் கொண்டோம்.

உங்களது சோகமான

[5 ஆம் பக்கம் பார்க்க]

## 67 ஐ விட அதிகமானோர் பலியாகியதாகத் தகவல்

கொக்கட்டிச்சோலைச் சம்பவத்தில் படுகொலையுண்டோரின் எண்ணிக்கை 67 என்று தெரிவித்து அவர்களின் பெயர் விவரங்களை ஆணைக் குழு தனது இடைக்கால அறிக்கையில் வெளியிட்டிருக்கிறது.

ஆனால் படுகொலையுண்டோரின் எண்ணிக்கை இதிலும் அதிகம் என்று கிராமவாசிகள் தெரிவித்ததாக ஏஜென்ஸிச் செய்திகள் தகவல் வெளியிட்டன.

கண்டெடுக்கப்பட்டு அடையாளம் காணப்பட்ட சடலங்களின் எண்ணிக்கை மற்றும் சாட்சிகளின் தகவல்களின் அடிப்படையிலேயே 67 பேர் உயிரிழந்தனர் என்று ஆணைக் குழு தெரிவித்திருக்கிறது.

ஆனால் காணாமற்போனோர் எண்ணிக்கை இதிலும் அதிகம் என்றும் —

அவர்கள் குறித்து சாட்சியங்கள் சமர்ப்பிக்கப்படாததால் அவர்களின் எண்ணிக்கை சேர்க்கப்படவில்லை என்றும் கிராமவாசிகள் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

இந்தப் படுகொலைச் சம்பவத்தில் பாதிப்புற்றோருக்கு நஷ்ட ஈடு வழங்க அரசு முடிவு செய்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. [உ-எ-5]

## உயர் அதிகாரி உட்பட 5 இராணுவத்தினர் காவலில்!

### ராணுவ நீதிமன்றம் விசாரிக்கும்!!

கொழும்பு, ஜன. 31

கொக்கட்டிச் சோலை படுகொலைச் சம்பவம் தொடர்பாக இராணுவ உயர் அதிகாரி ஒருவரும் நான்கு இராணுவத்தினரும் தற்போது காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் பற்றி விசாரித்த ஜனாதிபதி ஆணைக் குழுவின் இறுதி அறிக்கை வெளியானவுடன், சம்பந்தப்பட்ட இராணுவத்தினர் ஐவரும் இராணுவ நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு உட்படுத்தப்படுவர்.

இவர்கள் குற்றவாளிகள் எனக் காணப்படின் இராணுவ நீதிமன்றம் தண்டனை வழங்கும்.

இத்தகவல்களை இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்க நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

## குடாநாட்டில் தாக்குதல் சம்பவங்கள்:

### அரியாலை, கேரதீவில் பீரங்கி குண்டுகள் வெடித்தன

யாழ்ப்பாணம், ஜன. 31

குடாநாட்டிலுள்ள ஸ்ரீலங்காப் படையினர் நேற்று முன்தினம் மாலை தொடக்கம் நேற்று வரை பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டவண்ணம் இருந்தனர்.

நேற்று அதிகாலை வேளை பீரங்கிப் படகுகளில் இருந்து அரியாலை கிழக்கு மற்றும் கேரதீவுப் பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தப்

[2 ஆம் பக்கம் பார்க்க]

### இரு தமிழர் பலி

யாழ்ப்பாணம், ஜன. 31

கல்முனையில் நேற்று ஸ்ரீலங்காப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் இரு தமிழ்ப் பொதுமக்கள் உயிரிழந்தனர் என்று அங்கிருந்து கிடைத்த தகவல் ஒன்று தெரிவிக்கிறது. [ஒ]

### முச்சந்தி முரளி



சோழியன் குடுமி சும்மா ஆடாது பாருங்கோ......!

உள்ளே...

கனேடியத் தூதுக் குழு முன் கண்ணீர் மல்கிய தமிழர்!
3 ஆம் பக்கத்தில்

★ ★ ★

போஷாக்கின்றி கருகும் இளைய தலைமுறையினர்
5 ஆம் பக்கத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org

# கைதான மீனவர்கள் 40 பேர் மன்னாரில் தடுத்து வைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். குடாக் கடலில் வைத்து ஸ்ரீலங்காப் படையினரால் சமீப காலங்களில் கைது செய்யப்பட்டவர்களில் சுமார் 40 மீனவர்கள் மன்னாரில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இவர்கள் இராணுவத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டு மன்னாருக்குக் கொண்டு செல்லப்பட்டதாக அறிய வருகிறது.

அண்மைக்காலத்தில் குடாக் கடலில் மீன் பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த சமயம், மீனவர்கள் பலர் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே. (ஒ-5)

# கைதானோரை விடுவிக்க செஞ்சிலுவையினர் முயற்சி

சமீப காலங்களில் குடாக் கடலில் கைதான மீனவர்களை விடுவிப்பது சம்பந்தமாக செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் கொழும்பு தலைமையகம் முயற்சி மேற்கொண்டு வருவதாக அறியவருகிறது.

இந்த முயற்சி குறித்து செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். பிரதிநிதிகள் தரப்பில் இருந்து தமக்கு தகவல் கிடைத்துள்ளதாக யாழ். அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

மேற்படி செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் அண்மையில் காரைநகர் படை அதிகாரிகளுடனும் இது விடயமாக பேச்சுக்கள் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. [ஒ-5]

# ஈழத் தமிழ்க் குழுக்கள் திரும்பி வர மறுப்பு!

சென்னை, ஜன. 31

தமிழகத்தில் தங்கியிருக்கும் தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தோரும் அவர்களது குடும்பத்தினரும் இலங்கைக்குத் திரும்பிச் செல்ல மறுத்து விட்டனர் என்று இந்திய புலனாய்வு வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

வடக்கு, கிழக்கில் நிலைமை இன்னும் சீராகவில்லை என்றும், அங்கு சென்றால் தமது உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தங்களைக் கட்டாயப்படுத்தி திருப்பி அனுப்ப முற்பட்டால், தாம் உண்ணாவிரதம் இருக்கப்போவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தமிழ்க் குழுக்களைச் சேர்ந்தவர்களும் அவர்களது குடும்பத்தினரும் சிறப்பு அகதி முகாம்களில் — கடந்த வருடம் டிசம்பரில் இருந்து வேறுபடுத்தி வைக்கப்பட்டுள்ளனர் என்பது தெரிந்ததே. [ஒ]

# 10 ஆயிரம் மண்வெட்டிகள் பெற்றுத் தாருங்கள்!

## அரச அதிபரிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். மாவட்டத்தில் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள 10 ஆயிரம் மண்வெட்டிகள் அவசியம் தேவைப்படுவதாகவும் உடன் அவற்றைப் பெற்றுத்தருமாறும் யாழ். அரச அதிபரிடம் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

யாழ். செயலகத்தில் நேற்று நடந்த உணவு உற்பத்திக் குழுக் கூட்டத்திலேயே இவ்வாறு அரச அதிபரிடம் கோரிக்கை விடுவிக்கப்பட்டது.

விவசாய நடவடிக்கைகளுக்கு அவசியம் தேவைப்படும் மண்வெட்டி வகைகளை வடக்கே எடுத்துவரத் தடை விதிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. [உ-5]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம் :
**05 — 03 — 1930**

மறைவு :
**31 — 01 — 1991**

### திருமதி அந்தோனியாப்பிள்ளை சூசைப்பிள்ளை

அன்பின் இறைவா இவ்வுலக இன்ப துன்பங்களில் எல்லாம் உமக்கே சான்று பகர்ந்து, அன்பிற்கோர் இருப்பிடமாக, நற்பண்பிற்கோர் உறைவிடமாக, பொறுமைக்கோர் பிறப்பிடமாக வாழ்ந்து உம்மிடம் வந்தடைந்த திருமதி அந்தோனியாப்பிள்ளை சூசைப்பிள்ளைக்கு நித்திய இளைப்பாற்றியை அளித்தருள மன்றாடுகின்றோம்.

இவரின் ஆத்மசாந்திக்காக நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் ஆலயத்தில் இன்று [வெள்ளிக்கிழமை] காலை 6-30 மணிக்கு பூசைப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

பிரிவால் துயருறும் :
**கணவன், பிள்ளைகள், தங்கை, தம்பிகள்.**

58, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.

[19539]

# சைக்கிள்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கிளைப் போட்டு விட்டு ஓட முயன்றதாகவும்—

பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் அவர்கள் இருவரும் உயிரிழந்தனர் என்றும்—

அதனையடுத்து சில வினாடிகளில் சைக்கிளில் பொருத்தப்பட்ட குண்டு வெடித்தது என்றும் அந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

பொலிஸாரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவரும், சைக்கிள் குண்டு வெடித்ததில் ஒரு சப் இன்ஸ்பெக்டர், ஒரு கான்ஸ்டபிள் ஆகியோரும் காயமுற்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

# லில்லியில் தபால்கள்

யாழ்ப்பாணம், ஜன. 31

பருத்தித்துறைக்கு நாளை வரும் என எதிர்பார்க்கப்படும் 'லில்லி' கப்பலில் 3 ஆயிரத்து 290 மெற்றிக் தொன் உணவுப் பொருள்கள் எடுத்து வரப்படுகின்றன.

பாடசாலை மாணவர்களுக்குரிய இலவச பாடநூல்களில் ஒரு பகுதியும் —

151 வெளியூர் தபால் பொதிகளும் இந்தக் கப்பலில் எடுத்து வரப்படுகின்றன.


**NEW SCIENCE ACADEMY**
**JAFFNA.**

**92 A/L PHYSICS**

Electricity
(ஓட்டமின்னியல்)

எஸ். சோதிலிங்கம்
B. Sc. (Hons.)

Sat., Sun.
பிரிவு I 6-00—7-00
பிரிவு II 3-30—4-30

ஆரம்பம்:
**01-02-1992**

[சி-1454]



**புதிய உயர் கல்லூரி**
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**O/L - ஆண்டு 10**
வகுப்புகள்
நடைபெறுகின்றன.

**O/L Day Classes**
ஆரம்பம்:
13 — 02 — 1992
(காலை 8-[illegible]0 மணி)

**O/L புதிய பிரிவு**
[சனி, ஞாயிறு]
ஆரம்பம்:
01 — 02 — 1992
(6-[illegible]0 மணி)

SPOKEN ENGLISH
With
GRAMMAR
by
BRITTO
ஆரம்பம்:
01 — 02 — 1992
(11-[illegible]0 மணி)

[சி-1458]


# 67 தமிழர்களின்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கத்தில் சிக்கியே 67 பேரும் உயிரிழந்தனர் என்பதை ஆணைக்குழு நிராகரித்துள்ளது. அதற்கான சாட்சியங்கள் இல்லை என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் பற்றி விசாரணை செய்த ஜனாதிபதி ஆணைக்குழு தனது இடைக்கால அறிக்கையை ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் கையளித்திருக்கிறது.

கடந்த செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து, ஆணைக்குழுத் தலைவர் ஒ. எஸ். எம். செனவிரத்னா அறிக்கையைக் கையளித்தார்.

குழுவின் ஏனைய உறுப்பினர்களும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

**அரசாங்க அறிக்கையாகும்**

ஆணைக்குழு சமர்ப்பித்த இடைக்கால அறிக்கையை ஓர் அரசாங்க அறிக்கையாக பிரசுரிப்பது என்று அமைச்சரவை கடந்த புதன்கிழமை தீர்மானித்தது.

பாதுகாப்பு அமைச்சர் என்ற முறையில் இடைக்கால அறிக்கை பற்றிய குறிப்பு ஒன்றை ஜனாதிபதி அமைச்சரவைக்குச் சமர்ப்பித்தார்.

ஜனாதிபதி ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை வெகு விரைவில் சமர்ப்பிக்கும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் ரணில் விக்கிரமசிங்க நேற்றுச் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த இடைக்கால அறிக்கை, கொக்கட்டிச் சோலையில் நடந்த நிலக்கண்ணிவெடி, பொதுமக்கள் படுகொலை ஆகிய இரண்டு சம்பவங்கள் பற்றியே எடுத்துக் கூறுகிறது.

**தொடர்புண்டு**

இரண்டு படையினர் மரணமடைவதற்கும், ஒருவர் படுகாயமடைவதற்கும் காரணமாகவிருந்த நிலக்கண்ணி வெடிப்பிற்கும் 67 பொதுமக்கள் மரணமடைவதற்கும் இடையே தொடர்பு உண்டு என்று அந்த இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த இடைக்கால அறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

கொக்கட்டிச்சோலையில் நிலை கொண்டிருந்த ஆயுதப் படையினர் இப் பொதுமக்களின் மரணத்திற்குப் பொறுப்பாக இருந்தனர்.

ஆனால் பொதுமக்கள் மரணமடைந்தமைக்கு எந்தவிதமான இராணுவ நடவடிக்கையும் காரணமல்ல.

நிலக்கண்ணி வெடிப்பினால் மரணமடைந்த தமது சகாக்களின் மரணத்தினால் ஆத்திரம் அடைந்த படையினர் சிலரின் மட்டு மீறிய செயலால் தான் பொதுமக்கள் கொலையுண்டனர்.

—இப்படி அந்த இடைக்கால அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

மருதனார்மடம் கோட்டக் கல்வி வளர்ச்சிக் கழகத்தின் பொதுக்கூட்டம் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்படுகிறது. [த]

# அரியாலை...

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

பட்டது.

அரியாலை கிழக்கிலும், கேரதீவுப் பகுதியிலும் பீரங்கிக் குண்டுகள் விழுந்து வெடித்தன.

அந்த சமயத்தில் மண்டைதீவுப் படையினரும் குருநகர் பகுதியை நோக்கி வேட்டுக்களைத் தீர்த்தனர்.

நேற்று முன் தினம் இரவு 7 மணியளவில் சேந்தான் குளம் கடற்பகுதியில் இருந்து படையினர் வலித்தூண்டல், கீரிமலைக் கடற்பகுதிகளை நோக்கி பீரங்கித் தாக்குதல் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து கட்டுவன், குரும்பசிட்டி மினி முகாம் படையினரும் ஏழாலை, குப்பிளான், தெல்லிப்பளைப் பக்கமாக 50 கலிபர் தாக்குதல்களை நடத்தினர். [ஒ-51-15]


**மானிப்பாய் மகளிர் கல்லூரி**
**பரிசளிப்பு விழா**

**03-02-1992 திங்கட்கிழமை**

மேற்படி விழா 03-02-1992 திங்கட்கிழமை முற்பகல் 9-00 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். இவ்வைபவத்திற்கு பெற்றோர், நலன் விரும்பிகள், பாடசாலை அபிவிருத்திச் சங்க அங்கத்தவர்கள், பழைய மாணவிகள் சங்க அங்கத்தவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

பிரதம விருந்தினர் :- **திருவாளர் இ. சுந்தரலிங்கம்**
(வட பிராந்திய கல்விப் பணிப்பாளர்)

**திருமதி தே. சுந்தரலிங்கம்** பரிசில்கள் வழங்குவார்.

தவிர்க்க முடியாத காரணத்தால் தனிப்பட்ட அழைப்புகள் வழங்க முடியாமைக்கு வருந்துகின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள், மாணவிகள்.**

[சி-1460]



**யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி**
**மைதான விரிவாக்க நிதி சேகரிப்பு**

எமது சங்கத்தினால் நடாத்தப்படும் மேற்படி நிதிக்கான அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு 1-3-92ஆம் திகதிக்குப் பிற்போடப்பட்டுள்ளது என்பதை நண்பர்களுக்கு அறியத்தருகின்றோம்.

**செயலாளர்,**
**பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்: இந்துக் கல்லூரி.**

[சி/1377]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவத் தாக்குதல் நடந்தால் மக்களை அப்புறப்படுத்த இடமிராது

கொழும்பு, ஜன. 31

யாழ்ப்பாணக் குடாநாட்டின் மீது பாதுகாப்புப் படையினர் தாக்குதல் நடத்துவர் என்ற பீதி அங்குள்ள மக்கள் மத்தியில் காணப்படுகிறது. இத்தகையதோர் தாக்குதலினால் குடிமக்கள் பலர் உயிரிழக்கும் நிலை உருவாகும் என்று அஞ்சப்படுகிறது. தாக்குதல் ஆரம்பமானால் போரில் சம்பந்தப்படாத மக்களை அப்புறப்படுத்துவதற்கு குடாநாட்டில் இடம் இல்லை.

யாழ். வந்து திரும்பிய கத்தோலிக்க தூதுக்குழு இவ்வாறு தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்து நிலைமைகளைப் பார்வையிட்ட பின்னர் கொழும்பு திரும்பிய கத்தோலிக்க தூதுக் குழு அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

குடாநாட்டு மக்கள் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

நாட்டின் ஏனைய பகுதியினால் தாங்கள் கைவிடப்பட்டு விட்டதாக அவர்கள் உணருகிறார்கள். அரசினால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தடை போன்ற சொல்லொணா கஷ்டங்கள் குடாநாட்டு மக்கள் புலிகளிடம் சரணடையவே வழி கோருகின்றன.

யாழ். குடாவுக்கு தேவைப்படும் உணவுப் பொருள்களில் மூன்றில் ஒரு பகுதியே அரசாங்கம் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக குடாநாட்டைச் சென்றடைகிறது.

வடக்கே மருந்துப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. வயிற்றோட்டம், சீதப்பேதி, காய்ச்சல் போன்ற நோய்கள் பரவுகின்றன. குழந்தைகள் மரணிக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. மகப்பேற்றின்போது தாய்மார் இறக்கும் சம்பவங்களும் அதிகரிக்கின்றன.

இந்த நெருக்கடிகள் சகலவற்றுக்கு மத்தியிலும் குடாநாட்டு மக்கள் மத்தியில் உற்பத்தி நடவடிக்கைகளையும் உற்சாகமான மீளும் நடவடிக்கைகளையும் காணமுடிகிறது. வாழ்க்கையை சகஜமாக்கிக் கொள்ள தங்களாலான முயற்சிகளை மக்கள் செய்கிறார்கள்.

வடக்கில் வாழும் மக்களுக்கு சுயநிர்ணய உரிமை இருக்க வேண்டும் என மக்கள் கருதுகிறார்கள். ஆனால் அதிகாரப் பரவலாக்கல் மூலம் தங்களது உரிமைகளை பாதுகாத்துக் கொள்ளக் கூடிய நல்ல அரசியல் இணக்கத் தீர்வை மக்கள் ஏற்றுக்கொள்வர்.

மக்களின் சுய மரியாதையும் பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்பட வேண்டும். பேச்சுவார்த்தையை நடத்துவதற்கு அரச தரப்பில் காட்டப்படும் தாமதத்தினால் மக்கள் விசனம் கொண்டுள்ளனர்.

உடனடிப் போர் நிறுத்தம் ஒன்றை அவர்கள் கோருகிறார்கள்

இப்படி அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## குடாநாட்டு நிலைமையை விளக்கி கத்தோலிக்க தூதுக்குழு அறிக்கை

## மீண்டும் யாழ். வருவதற்கு கத்தோலிக்க குழு தயார்

கொழும்பு, ஜன. 31

அரசாங்கம் விரும்பினால், இனப்பிரச்சினை தொடர்பான அரசின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்குத் தெரிவிக்க மீண்டும் யாழ்ப்பாணம் செல்லத் தயாராக இருக்கிறோம். மீண்டும் யாழ்ப்பாணம் செல்ல வாய்ப்புக் கிடைத்தால் பௌத்த குருமாரையும் அழைத்துச் செல்வோம்.

கடந்த வாரம் யாழ்ப்பாணம் வந்து திரும்பிய கத்தோலிக்க நல்லெண்ணத் தூதுக்குழுவினர் கொழும்பில் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

பௌத்த குருமாரை யாழ்ப்பாணத்துக்கு அழைத்துச் செல்வதற்கான அனுமதியை புலிகள் இயக்கத்தினரிடம் இருந்து பெறுவது சிரமமானதல்ல என்றும் அவர்கள் கூறினார்கள்.

புலிகளின் நிலைப்பாட்டை ஜனாதிபதிக்கு விளக்க தாம் நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் குழுவினர் தெரிவித்தனர். [இ-3]

## பல்கலைக்கழக பரீட்சை முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் நடத்திய கலைமாணி [பகுதி 1], சிறப்புக் கலைமாணி [பகுதி 1], வர்த்தக மாணி [பகுதி 1], வணிக முகாமைத்துவ மாணி [பகுதி 1] பட்டப் பரீட்சைகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பொதுக் கலைமாணி [பகுதி 1], பரீட்சையில் 103 மாணவர்களும், சிறப்புக் கலைமாணி [பகுதி 1] பரீட்சையில் 93 மாணவரும், வர்த்தமாணி [பகுதி 1] பரீட்சையில் 73 மாணவர்களும், வணிக முகாமைத்துவ மாணி [பகுதி 1] பரீட்சையில் 32 மாணவர்களும் சித்தி அடைந்துள்ளனர். [அ]

## கால் நடைகள் மரணம்

யாழ்ப்பாணம், ஜன. 31

பருத்தித்துறைப் பகுதியில் கால் நடைகள் ஒருவித நோயினால் இறந்து வருகின்றன.

சாதாரண நிலையில் நிற்கும் ஆடு, மாடுகள் திடீரென நோய்வாய்ப்பட்டு நான்கு, ஐந்து நாட்களுக்குள் இறந்து விடுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. [த-15]

# கனேடிய தூதுக் குழு முன் கண்ணீர் மல்கிய தமிழர்கள்!

## மட்டக்களப்பில் நிகழ்ந்தது

மட்டக்களப்புக்கு வருகை தந்த கனேடிய மனித உரிமைகள் தூதுக்குழுவிடம் தமது உடன் பிறப்புக்களை, பெற்றோர்களை, புதல்வர்களை இழந்த பலர் கண்ணீர் மல்க கதறி அழுதவண்ணம் தமது நிலையைக் கூறினர்.

மட்டக்களப்புக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை விஜயம் செய்த இந்தக்குழு, மட்டக்களப்பு மத்திய வீதியில் உள்ள கத்தோலிக்க மண்டபத்தில் திங்களன்று பொதுமக்களைச் சந்தித்தது.

மட்டக்களப்பு மாவட்ட சமாதானக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்தக் கலந்துரையாடலில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்து மக்கள் கலந்து கொண்டனர்.

கண்ணீரும், கம்பலையுமாக காட்சி தந்த மக்கள் தெரிவித்த முறைப்பாடுகளை குழுவினர் அவதானமாகக் கேட்டு விவரங்களைச் சேகரித்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கனேடிய மனித உரிமைகள் தூதுக்குழுவினர் காத்தான்குடி பள்ளிவாசல், கொக்கட்டிச்சோலை அரிசி ஆலையில் உள்ள அகதி முகாம், வந்தாறுமூலை பல்கலைக்கழகம் உட்பட பல பகுதிகளுக்கும் சென்றனர். [இ-3]

## தமிழ்க்குழு உறுப்பினர் தற்கொலை

சென்னை, ஜன. 31

தமிழ்க்குழுஒன்றின் உறுப்பினரான அருட்சோதி என்பவர் தன்னைத் தானே தலையில் சுட்டுத் தற்கொலை செய்து கொண்டார் என்று சென்னையில் இருந்து வெளியான பி.ரி.ஐ. செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

அருட்சோதியின் சடலத்தை அவர் வாடகைக்கு இருந்த வீட்டில் கடந்த செவ்வாய்க்கிழமை பொலீஸார் கண்டு பிடித்தனர் என்றும், அவர் கடந்த 8 ஆண்டுகளாகச் சென்னையில் வசித்து வந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. [இ-எ]

## திருத்த வேலைகளைப் பார்வையிட மின்சார ஊழியர் குழு பயணம்

யாழ்ப்பாணம், ஜன. 31

மாங்குளம், கிளிநொச்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் மின்சார திருத்த வேலைகளைப் பார்வையிட மின்சார ஊழியர் குழு ஒன்று யாழ்ப்பாணத்தில் இருந்து அங்கு சென்றுள்ளது.

வட மாநில பொது முகாமையாளர், கணக்காளர், விநியோக உதவியாளர், மின்பொறியியலாளர் ஆகியோர் அந்தக் குழுவில் இடம்பெற்றுள்ளனர்.

அங்கு திருத்த வேலைகளைப் பார்வையிடும் இந்தக் குழுவினர் கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கு மின்சாரம் வழங்குவது தொடர்பாக ஆராய்வார்கள் என்றும்-

அடுத்த மாத முடிவுக்குள் அந்த இரு மாவட்டங்களுக்கும் மின்சாரம் வழங்க முடியும் என்றும் - நம்பிக்கை தெரிவிக்கப்பட்டது. [த-3]

## வவுனியாவில் செங்கல் உற்பத்தி

கொழும்பு. ஜன. 31

வவுனியாவில் செங்கல் உற்பத்தி மேற்கொள்ளப்பட இருக்கின்றது.

செங்கல் உற்பத்தி செய்வதற்கான மூன்று இயந்திரங்களை அரசாங்கம் இத்தாலியில் இருந்து வாங்கவிருக்கிறது. அவற்றில் ஒன்று வவுனியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

வீடமைப்பு, நிர்மாணத் துறை அமைச்சர் சிறிசேன குரே இத் தகவலை வெளியிட்டார். [இ-எ]


# புதிய உயர் கல்லூரி

(NEW COLLEGE OF HIGH STUDIES)

ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

93 G.A.Q. பேராதனை

புதிய பிரிவு ஆரம்பம்: 01 - 02 - 1992

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்களை எம்மிடம் பெற்றுக்கொள்ளவும்.

இதற்கான விண்ணப்ப முடிவு திகதி 31 1-1992

நிர்வாகி:
திருமதி S. அருள்நங்கை

(சி/1443)



# கலை, வர்த்தகக் கல்லூரி

C. C. A. வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம்.

A/L - 93 4வது பிரிவு [இறுதிப் பிரிவு]

ஆரம்பம்: 01 - 02 - 1992 (சனி)

| | | | நேரம் |
|---|---|---|---|
| பொருளியல் | — | உதயன் | 10—11 |
| கணக்கியல் | — | ஸ்ரீ | 11—12 |
| வர்த்தகம் | — | ரட்ணம் | 12—1 |
| இந்துநாகரிகம் | — | ஜோதீஸ்வரன் | 1—2 |
| புவியியல் | — | வேலாயுதபிள்ளை | 2—3 |
| தமிழ் | — | குழந்தை | 7—8 |
| அளவையியல் | — | சயந்தன் | 8—9 |

[சி/1438]



# வெளிவந்துள்ளது!

**Tamil Institute of Strategic Studies**

**Uduvil**

இனால் வெளியிடப்படும்

பூகோள அரசியல் - இராணுவ தந்திரோபாய ஆய்வு நூல்.

நூலின் தலைப்பு:

## "நியூக்கிளியர் ஆயுதங்கள் தொடர்பான அமெரிக்க புதிய கொள்கைத் திட்டங்களும் எதிர்கால உலகமும் நாமும்"

இன்றைய நவீன உலகில் பூகோள அரசியல் போக்கினைச் சரியாக ஆராய்ந்தறியாவிடின் ஒரு சமூகமோ அல்லது ஒரு நாடோ முன்னேற்றத்தினைத் தொடர்ச்சியாக ஏற்படுத்த முடியாது.

விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் போராடி வரும் இலங்கைத் தமிழர்கள் இன்றைய, எதிர்காலப் பூகோள அரசியல் போக்கினைச் சரியாக ஆராய்ந்தறிந்து, தமது அரசியல், பொருளாதார, சமூகத் திட்டங்களையும், அரசியல் - இராணுவத் தந்திரோபாயங்களையும் தகுந்தபடி வகுத்துச் செயற்பட வேண்டியுள்ளது.

இந்த ஆய்வு நூல் இவற்றினை, இயலுமான வரை, எளிமையாகவும், சுருக்கமாகவும், தெளிவாகவும் உங்களுக்குத் தருகிறது. சாதாரண பொதுமக்கள் பூகோள அரசியல் போக்கினை ஆராய இந்த ஆய்வு நூல் உதவும்.

*Tamil Institute of Strategic Studies*

Uduvil.

31 ஜனவரி, 1992. [சி-1375]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

Bantom முட்டைகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு Kivi Photo, 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [19528]

தனிப் பாவிப்பில் நின்ற C 90, சிவப்பு (திருத்திப் பாவிக்க வேண்டும்) விற்பனைக்குண்டு. கி. ஆனந்தம், தபால் அதிபர், வடக்கு சண்டிலிப்பாய். (19520)

### தேவை

பெண்கள், சிறுவர், சிறுமியர் குழந்தைகளுக்கான ஆடைகள் வெட்டித் தைக்கத் தெரிந்தவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும். வினோபா ரேட் சென்ரர், 42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (எழிலகத்தின் முன்பாக) [19521]

### மெஷின்மைன்டர் தேவை

தற்காலிக/ பகுதி நேர அடிப்படையில் எமது ஸ்தாபனத்திற்கு பிளேற்றிங் உட்பட, மெஷின் ஓடக்கூடிய மெஷின்மைன்டர் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். தென்னிந்திய திருச்சபை காரியாலயம், வட்டுக்கோட்டை. [சி/1432]

### தவறிவிட்டன

ஓமந்தையிலிருந்து புளியங்குளத்திற்குப் போகின்ற வழியில் இராசையா சத்தியலிங்கம் ஆகிய எனது அடையாள அட்டையும், பாஸும் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இராசையா சத்தியலிங்கம், அரசடி வீதி, இருபாலை, கோப்பாய் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். [19533]

### இலவச திருமண சேவை

24 வயது, ஆயிலியம், B. A. டிப்ளோமா கம்பியூட்டர் பயிலுனருக்கு தகுந்த மணமகன் தேவை. எமது சேவையை நாடுபவர்கள் ஞாயிறு காலையில் சந்திக்கலாம். து. விமலா, நாச்சிமார் கோவிலடி, யாழ்ப்பாணம். [5023]

### சோதிட மாந்திரீகம்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். ''சக்தி சரவணா'' 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். [யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானம் முன்பாக] தினசரி பகல் 9 மணி தொடக்கம் 3 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (5025)

### பழைய அரசியல் புத்தகம்

ஈழத்து பழைய அரசியல் சஞ்சிகைகள், புத்தகங்கள் நல்ல விலையில் கொள்வனவு செய்யப்படும் யாழ். பழைய புத்தகக்கடை, 32, அருச்சுனா, (ஸ்ரான்லி) வீதி, [5021]

புதிய உயர் கல்லூரி
NewCollege of HighStudies
ஆரியகுளம் சந்தி,
யாழ்ப்பாணம்.

**Spoken English**
**With Grammar**
by BRITTO

புதிய பிரிவு ஆரம்பம்
**1-2-1992**
காலை 11 மணி
[சி-1440]

### அச்சு வேலைகள்

திருமணம், திறப்பு விழா, புதுமனை புகுவிழா அழைப்பிதழ்கள், மற்றும் அந்தியேட்டி அழைப்பிதழ்கள், நினைவு மலர்கள் ஆகியவற்றைச் சிறந்த முறையில் உரிய வேளையில் நீங்கள் அச்சிட்டுப் பெற்றுக் கொள்ள நாடுங்கள்! அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். [சி/1256]

### புத்தகம் கட்டுதல்

ஆய்வுக் கட்டுரைகள், பாடசாலை மாணவர்களின் புத்தகங்கள், நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்களும் உரிய நேரத்தில் கவர்ச்சியான முறையில் கட்டிக் கொடுக்கப்படும். அருண் அச்சகம், 15, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி/1186)

### G. C. E. A/L

கடந்த கால விஞ்ஞான, வர்த்தக வினா- விடைப் புத்தகங்கள் விற்பனையாகின்றன. அறிவகம், 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி/1444)

றியல்ஸ்
சுதுமலை.
[அம்மன் கோவில் முன்பாக]

Spoken English
By
ஜெயகாந்தன்

ஆரம்பம்:
1-2-1992
சனி மாலை 4-00
[5026]

**BITSMANS**
**கல்வி நிறுவனம்,** மானிப்பாய்.

A/L 93 — 2 ஆவது பிரிவு — கலை, வர்த்தகம்

| | | | |
|---|---|---|---|
| 6-00 | காலை | பொருளியல் ... | உதயன் |
| 7-00 | '' | கணக்கியல் ... | ராஜன் |
| 8-00 | '' | வர். நிதியும் ... | தேவா |
| 4-00 | மாலை | அளவையியல் ... | S.S. மனோகரன் |
| 5-00 | '' | தமிழ் இ.நாகரிகம் ... | பாலா |

ஆரம்பம்: 01-02-1992 சனி காலை 6-00
[சி-1448]

**விக்னா** கல்வி நிறுவனம்
52, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.
(O/L வகுப்புகளுக்கு தனித்துவம் வாய்ந்த ஒரே நிறுவனம்)

**O/L**

★ மாலை நேர வகுப்புகள் [மாலை 3 மணி முதல் 6 மணி வரை]
★ பகல் நேர வகுப்புகள் [காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை]
★ சனி, ஞாயிறு வகுப்புகள் [காலை 8 மணி முதல் பிற்பகல் 2மணி வரை]

★ புதிய பிரிவுகள் ★
ஆரம்பம்: 01-02-1992

★ எமது தனித்துவம் வாய்ந்த ஆசிரியர்களின் ஒன்றிணைந்த போதனை.
★ கடமை, கட்டுப்பாட்டுடன் நடத்தப்படும்.
[சி-1370]

## ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 16 — 05 — 1898
மறைவு: 31 — 01 — 1991

**அமரர் G. A. இரத்தினவரதர்**
[இளைப்பாறிய அதிபர், வீமன்காமம் மகாவித்தியாலயம், மாவிட்டபுரம்]

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

தபாற்கந்தோர் வீதி,
சாவகச்சேரி. [19529]

## அமிர்தலிங்கம் கொலை வழக்கு

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முன்னாள் எம். பிக்களான அ. அமிர்தலிங்கம் மற்றும் வெ. யோகேஸ்வரன் கொலை வழக்கு நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதாக இருந்தது.

அப்போது சட்ட வைத்திய அதிகாரிகள் சாட்சியமளிக்க இருந்தனர். [இ-எ]

அச்சு வேலைகளுக்காக அலைந்து திரியாதீர்கள்
ஒரே இடத்தில் சகல தேவைகளையும்
**பூர்த்தி செய்து கொள்ளலாம்**

★ கடிதத் தலைப்பு Letter Heads
★ விலாச அட்டை Visiting Cards
★ கடித உறைகள் Envelopes
★ சுவரொட்டிகள் Posters
★ துண்டுப்பிரசுரங்கள் Hand Bills
★ புத்தகங்கள் Books
★ மலர் வெளியீடுகள் Bulletins

போன்ற சகல ஆங்கில, தமிழ் அச்சு வேலைகளை நாம் வனப்புடனும், சிறப்புடனும் உரிய நேரத்தில் செய்து தருவோம்.

**உதயன்**
292/2, நாவலர் வீதி, :: :: யாழ்ப்பாணம்.

வலி. கிழக்கு தென்பகுதி
பல நோக்கு கூட்டுறவுச் சங்கம்,
நீர்வேலி.

மண்எண்ணெய்
ஏற்றி வருவதற்கு லொறிக் கூலிக்கான
**கேள்வி விண்ணப்பம்**

கொழும்பிலிருந்து மேற்படி எமது சங்கம் வரை மண்எண்ணெய் [45 பரல்] ஏற்றிக்கொண்டு வந்து ஒப்படைப்பதற்கும், கொழும்பிலிருந்து ஏற்றி வந்து ஊரியான் வரை ஒப்படைப்பதற்கும் லொறிக் கூலிக்கான கேள்வி விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

குறித்த கேள்வி விண்ணப்பங்கள் ''பொது முகாமையாளர், வலி. கிழக்கு தென்பகுதி ப. நோ. கூ. சங்கம், நீர்வேலி'' என்ற விலாசத்திற்கு 4 - 2 - 1992 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 – 00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாகத் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்ப தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''லொறிக் கூலிக்கான கேள்வி விண்ணப்பம்'' எனக் குறிப்பிடப் படல் வேண்டும்.

— பொது முகாமையாளர்.

நீர்வேலி,
1992 - 01 - 23. [சி-1373]

## ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 30 — 08 — 1969
மறைவு: 31 — 01 — 1991

**சோமசுந்தரம் கண்ணன்**

ஆண்டுகள் ஒன்று ஆனதையா
ஆண்டவன் அடி நீர் சென்று
ஆனாலும் ஆறிடுமோ உம் பிரிவு
ஆண்டுகள் ஆயிரம் சென்றாலும்
ஆறாதையா உம் நினைவு
நித்தம் நித்தம் உம் நினைவு வந்து
நெஞ்சை வாட்டுதையா

உன் பிரிவால் வாடும்:
அப்பா, அம்மா, அக்காமார்,
அண்ணன், தங்கைமார்.

6/5, கன்னாதிட்டி லேன்,
யாழ்ப்பாணம். [19525]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### மாற்றத்தின் நோக்கம்

வடபிராந்திய மக்கள் வங்கி அலுவலகத்தின் கீழ் இயங்கி வந்த வவுனியாக் கிளை, அனுராதபுர பிராந்திய அலுவலகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதே போல, மட்டக்களப்பு பிராந்திய அலுவலகத்தின் கீழ் இயங்கி வந்த மக்கள் வங்கிக் கிளைகள் சில அம்பாறை பிராந்திய அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

வவுனியாவில் உள்ள மக்கள் வங்கிக் கிளை, யாழ்ப்பாணத்தில் உள்ள பிராந்திய தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதில் உள்ள தடங்கல்கள், தாமதங்களைக் காரணம் காட்டியே அதன் நிர்வாகம் அனுராதபுரத்தின் கீழ் கொண்டு வரப்பட்டிருக்கிறது!

மட்டக்களப்பில் உள்ள மக்கள் வங்கிக் கிளைகளின் நிர்வாக எல்லைகள் மாற்றப்படுவதற்கும் இதே போன்ற சில நொண்டிச் சாட்டுகள் — நிர்வாகக் காரணங்கள் — தெரிவிக்கப்பட்டுள்ளன.

தமிழ்ப் பகுதிகளில் இயங்கும் வங்கிக் கிளைகளை சிங்களப் பிரதேச அலுவலகங்களுடன் இணைப்பதற்குக் கூறப்படும் நிர்வாகக் காரணங்கள் வெறும் போலியானவை. ஆழமான, கபடம் நிறைந்த உள்நோக்கம் கொண்டவை.

தமிழ்ப் பிரதேசங்களில் இயங்கும் வங்கிக் கிளைகளின் நிர்வாக அதிகாரத்தைச் சிங்களப் பிரதேச அலுவலகங்களுக்கு மாற்றிக் கொண்டு, தமிழர்களுக்குக் கிடைக்கக் கூடிய ஒரு சில வசதிகளையும், உதவிகளையும் தடுத்து விடுவதே பிரதான நோக்கமாகும்.

தமிழ் வாடிக்கையாளர்கள் தங்கள் பணத்தை வைப்புச் செய்வதன் மூலமும், சேமிப்பதன் மூலமும் உண்டாக்கிய நிதி வளங்களை சிங்களப் பகுதிகளுக்குச் சூறையாடிச் செல்வது ஒன்று.

வடக்கு-கிழக்குப் பிரதேசத்தின் புனர்நிர்மாணத்துக்கெனவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வு, அபிவிருத்திக்கெனவும் உலக நாடுகள் மற்றும் உலக வங்கி, சர்வதேச நாணய சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியன விசேடமாகக் குறிப்பிட்டு வழங்கும் பணம் தமிழ் மக்களைச் சென்றடையாமல் தட்டிப் பறித்து சிங்களவர்கள் சுவறச் செய்வது இன்னொரு நோக்கம்!

நிவாரணம், புனர்வாழ்வு, அபிவிருத்திக்கெனத் தமிழ்ப் பிரதேசங்களுக்குக் கிடைக்கும் நிதியை பயன்படுத்துவது, மக்களுக்கு வழங்குவது, செலவிடுவது சம்பந்தமான நிர்வாக அதிகாரங்களை சிங்களப் பகுதிகளில் இயங்கும் அலுவலகங்களுக்கு எடுத்துக் கொண்டால், இரண்டாவதாகக் கூறப்பட்ட அபகரிப்பை இலகுவாகச் செய்து கொள்ளலாம்.

நிதியைக் கையாளும் விடயத்தில் நாணயக் கயிறைச் சிங்கள அதிகாரிகளே வைத்திருந்தால், தமிழ்ப் பகுதிகளுக்கென, தமிழர்களுக்கெனக் கிடைக்கும் பணத்தை இலகுவாக சிங்களவர்களுக்கு, சிங்களப் பிரதேசங்களுக்கு மாற்றிக்கொள்ளலாம். அந்த அபகரிப்பை மூடிமறைப்பதற்குத் தேவையான நிர்வாகச் சரிக்கட்டுதல்களை உருவாக்கிக் கொள்ளலாம்!


தமிழ்ப் பகுதிகளின் எல்லைகளில் உள்ள சிங்களப் பகுதிகளுக்கும், சிங்கள மக்களுக்கும் தமிழர்களுக்கெனக் கிடைக்கும் நிதியை ஆற்றுப்படுத்திவிட்டு தமிழ்ப் பிரதேசத்துக்குத் தானே வழங்கினோம் என்று ஏமாற்றுவதும் சுலபம்!

அதற்காகவே தமிழ்ப்பகுதி வங்கிகளின் நிர்வாகம் சிங்களப் பகுதிகளுக்கு மாற்றப்படுகிறது.

# போஷாக்கின்மையால் நலிவுற்று கருகும் நிலையில் இளம் தலைமுறை

தமிழர் தாயகத்தில் நிலவிவரும் நெருக்கடியான சூழ்நிலை எமது மண்ணில் விளையும் குழந்தைச் செல்வங்களின் ஆரோக்கிய வாழ்வைக் கேள்விக்குறியாக்கியிருக்கின்றது.

இன்றைய சிறார்களே எமது நாளைய தலைமுறை. அவர்களின் உடல், உள வளர்ச்சியே எதிர்காலத்தில் எமது சமுதாயத்தின் காப்பரண். அந்தக் காப்பரண் வலுவற்றுப் போய்க் கொண்டிருப்பதை நாம் உணர்ந்திருக்கிறோமா? அது வலிமைமிக்கதாக அமைவதை நாம் உறுதிப்படுத்தியிருக்கிறோமா?



நெருக்கடி நிலையால் எமது குழந்தைச் செல்வங்களின் ஆரோக்கியத்துக்கு விளைந்திருக்கும் கெடுதியை, அதை சரி செய்யாமல் விட்டால் எமது சமுதாயம் எதிர்கொள்ளப் போகும் ஆபத்தை, சமூகத்துக்கு சற்று உணர்த்துவதே இக்கட்டுரைத் தொடரின் நோக்கம்.

எமது சமுதாயத்தில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடி நிலை, அது உருவாக்கிய தொழில் துறைப் பாதிப்பு, விலைவாசி உயர்வு, வருமானமின்மை, வறுமை, வீடு வாசல் இழப்பு, அகதி முகாம் வாழ்க்கை, ஸ்ரீலங்கா அரசின் பொருளாதாரத் தடை போன்றவை போஷாக்கின்மை மிக்க - நலிவுற்ற சிறுவர் சமுதாயம் ஒன்றை எங்கள் கண்முன்னே உருவாக்கிக் கொண்டிருக்கிறது. இதனால் எமது எதிர்காலச் சந்ததிக்கு ஏற்படக்கூடிய சீரழிவை ஊகித்து மருத்துவ வட்டாரங்கள் திகிலடைந்திருக்கும் அதே வேளை, மருத்துவ வட்டாரங்களுக்கு அப்பால், எமது சமுதாயம் இந்த ஆபத்தைக் கண்டும் காணாமல் அல்லது கண்டும் கவனமின்றி வாளாவிருப்பது கவலைக்குரியது.

ஒரு புறத்தில் போஷாக்கின்மையால் நலிவுற்ற குழந்தைகள் சமுதாயம் ஒன்று உருவாகிக் கொண்டிருக்க, அதே சமயம் மறுபுறத்தில் உரிய நோய்த்தடுப்பு முறைகள், சுகாதார சூழ்நிலை, மருத்துவ முன்நடவடிக்கைகள் போன்றவை பேணப்படாததால் அந்தச் சமுதாயம் நோயில் நலிவுற்று அழிந்து கொண்டிருக்கிறது.

குழந்தைகள் சமூகத்தைக் காப்பாற்றுவதற்கு ஆபத்து மணி அடிக்க வேண்டிய காலம் வந்துவிட்டது.

### போஷாக்கு உணவு

சிறார்களின் வளர்ச்சிக்கும், விருத்திக்கும், உறுதிக்கும் உரிய போஷாக்கு உணவுகளை நாம் அவர்களுக்கு வழங்க வேண்டியவர்களாக இருக்கிறோம். புரதம், மாப்பொருள், கொழுப்பு, விற்றமின்கள், கனிப்பொருள்கள் போன்றவையுடன் கூடிய நிறைவான உணவை அவர்களுக்கு வழங்க வேண்டியது இந்தச் சமூகத்தின் கடமையாகும்.

இப்போதுள்ள நிலையில் போஷாக்கு உணவைப் பெறுவது என்பது வசதியற்ற - வருமானமற்ற குடும்பங்களுக்கு மட்டும் உரிய பிரச்சினை அல்ல. வசதியுள்ள குடும்பங்கள் கூட — பணம் இருந்தும் — போஷாக்கு மிக்க உணவுகளை தம் குழந்தைகளுக்கு பெற்றுக் கொடுக்க முடியாத நிலை. சந்தையில் அவை தயார் நிலையில் விற்பனைக்கு இல்லை.

அப்படியானால் எங்கள் குழந்தைகளுக்கு போஷாக்கு உணவைப் பெற்றுக்கொடுக்க வழியில்லையா? குறைந்த செலவில் போஷாக்கு நிறைந்த உணவைப் பெற்றுக்கொடுக்க— எமது சூழலிலேயே இலகுவான வழிகள் இருக்கின்றன.

வெளிநாடுகளில் தயாராகி இங்கு அதிக விலையில் விற்பனைக்கு வரும்— ரின்களில் அடைக்கப்பட்ட — குழந்தைகள் உணவுக்கு நிகரான போஷாக்கு மிக்க மாற்றுணவுகளை நாம் உள்ளூரிலேயே குறைந்த செலவில் பெற முடியும் என்றால் ஆச்சரியப்படுகிறீர்களா?

எமது எதிர்காலச் சமூகத்தைக் காப்பாற்ற — எமது மூல வளங்களைக் கொண்டே குறைந்த செலவில் சத்துணவை உருவாக்கும் முறையை ஒவ்வொரு குடும்பத் தலைவனும், தலைவியும் அறிந்திருப்பது அவசியம்.

— கூர்விழியான் —

(வளரும்)

## போஷாக்கின்றி நலிவுற்ற குழந்தைகள் 67 வீதம்

நலிவுற்றுப் போய்க் கொண்டிருக்கும் எமது குழந்தைகள் சமூகத்தின் நிலையை படம் பிடித்துக் காட்டும் புள்ளிவிவரம் ஒன்று இதோ:

யாழ். மாநகர சபை எல்லைக்குள் அகதி முகாம்களில் வசிக்கும் மக்கள் மத்தியில் மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்விலிருந்து இந்த திடுக்கிடும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

| வயது | | நிறுக்கப்பட்ட குழந்தைகள் | நிறை குறைந்த குழந்தைகள் |
|---|---|---|---|
| 0 — 1 | வருடம் | 108 | 44 |
| 1 — 2 | ,, | 105 | 70 |
| 2 — 5 | ,, | 539 | 390 |

ஆக மொத்தம் 67 வீதமான குழந்தைகள் தமது வயது, விருத்திக்குரிய நிறையின்றி — போஷாக்கின்றி — உடல் நலிவுற்று — வளர்ந்து கொண்டிருக்கின்றன. இவர்களின் எதிர்காலம் என்ன?

## எல்லா கர்ப்பிணிகளுக்கும் இரத்தச் சோகை நோய்!

குடாநாட்டில் உள்ள கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மாரில் அனேகமாக அனைவருமே இரத்தச் சோகைக்கு உட்பட்டிருக்கிறார்கள்.

குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட மற்றோர் ஆய்வு இத்தகவலை வெளியிட்டிருக்கிறது.

138 கர்ப்பிணித் தாய்மாரில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஒருவர் தவிர மிகுதி 137 பேரும் இரத்தச் சோகைக்கு உட்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. பாலூட்டும் தாய்மாரின் நிலையும் அதுவே.

இரத்தச் சோகை மிக்க கர்ப்பிணித் தாய்மார் பெற்றெடுக்கப் போகும் சிசுக்கள் எமது சமூகத்தில் எப்படித் தாக்குப் பிடிக்கப் போகின்றன?

## உதவும் நாடுகளைச்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டது இதுவே முதல் தடவையாகும். இதற்கு முன்னரும் பொதுமக்களை பாதுகாப்புப் படையினர் படுகொலை செய்த சம்பவங்கள் பற்றி முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் அவைகள் விசாரணை செய்யப்படவில்லை.

இப்போது நடத்தப்பட்ட விசாரணையின் முடிவு பாதுகாப்புப் படையினருக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் என்று நான் எண்ணுகின்றேன்.

**உதவும் நாடுகளுக்கு சைகை**

கேள்வி : அப்படி என்றால் ஜனாதிபதி ஆணைக்குழுவின் குற்றச்சாட்டில் உள்ள முக்கியத்துவம் குறித்து நீங்கள் எவ்விதம் மதிப்பீடு செய்கிறீர்கள் ?

பதில் : ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை இலங்கைக்கு உதவும் நாடுகளுக்கான சைகையாக அரசு பயன்படுத்தலாம் என்று தெரிய வருகிறது.

மனித உரிமை பேணும் விஷயத்தில் உள்ள குறைபாடுகளை அகற்ற அரசு தயாராக இருக்கிறது என்பதற்கான சைகையாக இந்த அறிக்கையை அரசு பயன்படுத்தும்.

அதேவேளை —

இராணுவத் தளபதிகள் தங்கள் கீழ் உள்ள படையினரை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று இராணுவத்தினருக்கு எச்சரிக்கை செய்வதாகவும் அரசு இந்த விசாரணை அறிக்கையைப் பயன்படுத்தலாம்.

இலங்கைத் தமிழ் அகதிகள் இந்தியாவிலிருந்து தாயகம் திரும்ப ஆரம்பித்திருக்கும் இவ்வேளையில் விடுதலைப் புலிகள் பாதுகாப்புப் படையினர் மீது தமது தாக்குதலைத் தீவிரப்படுத்தி உள்ளனர். இச்சமயத்தில் கொக்கட்டிச்சோலை படுகொலை போன்ற ஒரு சம்பவம் மீண்டும் இடம்பெறுவது அகதிகள் தாயகம் திரும்பும் நடைமுறையைக் குழப்பி விடும் என்பதாலும், படையினர் பழி வாங்கும் நடவடிக்கையில் ஈடுபடாது தடுக்கவும் இந்த அறிக்கை மூலம் இராணுவத் தளபதிகள் மீது நெருக்குதலைக் கொடுக்க அரசாங்கம் முயற்சிக்கும்.

**நாட்டம் அதிலேயே**

கேள்வி : இலங்கைக்கு உதவும் நாடுகளில் இருந்து உதவிகளைப் பெறுவதற்காகவே கொக்கட்டிச்சோலை படுகொலை பற்றிய ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையை அரசாங்கம் ஏற்றுக் கொண்டுள்ளதா ?

பதில் : இலங்கை அரசின் மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் குறித்து கவலை கொண்டிருக்கும் உதவும் நாடுகளை சமாளிக்கும் நோக்கத்துடன்தான் ஆணைக்குழு அறிக்கையை அரசு ஏற்றுக் கொண்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் தெரிவிக்கப்படுகிறது.

தமிழருக்கு நீதி வழங்குவதிலும் பார்க்க அரசு உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்துவதில் தான் கூடுதல் அக்கறை காட்டுவதாக சில தமிழ் அரசியல்வாதிகள் தெரிவித்தனர்.

இவ்வளவு காலமும் அரசு தமிழர் மீது படையினர் நடத்தும் படுகொலைகள் குறித்து அக்கறை காட்டாது இருந்து வந்தது. இப்போதாவது அரசு அக்கறை காட்ட ஆரம்பித்திருப்பதை அந்த அரசியல்வாதிகள் வரவேற்றுள்ளனர்.

மனித உரிமை மீறல் பற்றிய முறைப்பாடுகள் குறித்து கொழும்பு அரசு ஏதோ நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளது என்று உதவும் நாடுகளுக்குக் காட்ட முயற்சிக்கப்படுகிறது. இதன் மூலம் உதவி வழங்கும் நாடுகளிடமிருந்து தொடர்ந்து உதவி பெறுவதை நியாயப்படுத்துவதே அரசின் நோக்கமாக உள்ளது.

[அ-எ]

## கிழக்கு..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முறைப்பாடுகளை நாம் உரிய அமைச்சுகளுடனும், அதிகாரிகளுடனும் தொடர்பு கொண்டு நீக்குவோம்.

நாங்கள் கொழும்பு வந்தவுடன் பிரதமர் டி. பி. விஜயதுங்காவைச் சந்தித்தோம். கொழும்பு திரும்பியதும் ஜனாதிபதி பிரேமதாஸா மற்றும் முக்கியஸ்தர்களையும் சந்திக்கவிருக்கிறோம்.

அப்போது உங்கள் நிலைமையை அவர்களுக்கு விளக்கி, தீர்வுகாணும் நடவடிக்கைகளை எடுக்க முயலுவோம்'' எனறார்.

[உ-3]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா தோட்டப் பகுதிகளில் சீருடையினர் கொள்ளை

கொழும்பு, ஜன. 31

ஊவா தோட்டப் பகுதிகளில் கொள்ளையர்கள் சீருடையில் சென்று தோட்டப் பகுதி மக்களின் உடைமைகளைச் சூறையாடுகின்றனர். இதனால் தோட்டப் பகுதித் தொழிலாளர்கள் மத்தியில் பதற்றமும், அச்சமும் நிலவுகின்றன என்று கூறப்படுகின்றது.

கொள்ளைச் சம்பவங்களைத் தடுத்து நிறுத்தி, பதற்றத்தைத் தணிக்கும்படி துணை அமைச்சரும் இ. தொ. கா. பொதுச் செயலாளருமான எம். எஸ். செல்லச்சாமி பாதுகாப்பு அமைச்சைக் கடிதம் மூலம் கோரியுள்ளார். (இ-எ)

# எல்ல தோட்ட சம்பவம்; புலிகள் தான் பொறுப்பு

## டி. ஐ. ஜி. கொழும்பில் தகவல்

கொழும்பு, ஜன. 31

ஊவா மாகாணம் — எல்ல தோட்டப் பகுதியில் இடம்பெற்ற கொலை மற்றும் கொள்ளைச் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள் இயக்கமே பொறுப்பு என்பது தெரிய வந்திருக்கிறது.

பிரதிப் பொலீஸ் மா அதிபர் [டி. ஐ. ஜி.] ரெறி அமரசேகரா நேற்று செய்தியாளர் மாநாட்டில் இத்தகவலை வெளியிட்டார்.

அச்சம்பவம் தொடர்பாக மேலும் தடயங்கள் கிடைக்கும் வாய்ப்பு இருப்பதாகவும் அவர் கூறினார்.

எல்ல சம்பவம் தொடர்பாக கைதான 155 பேரில் பெரும்பாலோர் விடுவிக்கப்பட்டு விட்டனர். 40 பேர் தடுப்பு முகாம்களில் வைக்கப்பட்டுள்ளனர். 5 பேர் பொலீஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டனர். அவர்களில் மூவர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்கள். எஞ்சிய இருவரும் மலை நாட்டைச் சேர்ந்தவர்கள்.

—இவ்வாறு டி.ஐ ஜி. மேலும் தகவல் தந்தார்.

**மக்கள் மயமாக்கல் திட்டத்தின் கீழ்**

# பதவி விலகும் கூட்டுத்தாபன ஊழியருக்கு சேமலாப நிதி

கொழும்பு, ஜன. 31

மக்கள் மயமாக்கல் திட்டத்தின் கீழ் தமது பதவிகளில் இருந்து விலகும் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு அரசினால் ஊழியர் சேமலாப நிதி வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

சம்பந்தப்பட்டவர்கள் சேமலாப நிதியை உடனடியாகப் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான சகல ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளதாக தொழில் ஆணையாளர் ஜி. வீரக்கோன் தெரிவித்துள்ளார், [ஒ-த[

# நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன. 31

யாழ். கே. கே. எஸ். வீதியில் அமைந்துள்ள யாழ். செவிப்புலனற்றோர் புனர்வாழ்வு நிலையத்தின் 10 ஆவது ஆண்டு நிறைவு விழா நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கில்னர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி கலந்து கொள்கிறார். [உ-5]

# தொழில்நுட்ப மாணவர் கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன. 31

நாளை காலை 9 மணிக்கு யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் நடைபெறவிக்கும் முக்கிய கூட்டம் ஒன்றிற்கு சமுகம் தரும்படி மாணவர் அவை நிர்வாக உறுப்பினர்களையும், வகுப்புப் பிரதிநிதிகளையும், வலைப்பந்தாட்ட, உதைபந்தாட்ட குழுக்களையும், முதலுதவிப் பயிற்சி பெற்ற கல்லூரி மாணவர்களையும் தொழில்நுட்பக் கல்லூரி மாணவர் அவை கேட்டுள்ளது. (உ)

# விண்ணப்ப தினம் நீடிப்பு

யாழ்ப்பாணம், ஜன, 31

1992 ஆம் ஆண்டுக்குரிய அன்னை பூபதி பொது அறிவுத் தேர்வுக்கு விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் தினம் பெப்ரவரி 6 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் மேற்படி திகதிக்கு முன்னர் தத்தமது அதிபர்கள் ஊடாக விண்ணப்பங்களை அனுப்பி வைக்குமாறு விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம் கேட்டிருக்கிறது. (உ)

# தபால் ஊழியருக்கு விசேட கொடுப்பனவு

கொழும்பு, ஜன. 31

அமைச்சரவையின் அங்கீகாரத்துடன் வாரம் ஆறு தினங்கள் வேலை செய்யும் சகல தரங்களையும் சேர்ந்த தபால் ஊழியர்களுக்கும், ஆறாவது நாள் வேலை செய்வதற்காக விசேட கொடுப்பனவுகள் வழங்கப்படும் என்று அறிவிக்கப்படுகிறது.

தபால், தொலைத்தொடர்பு அமைச்சர் திரு. ஏ. எம். எஸ். அதிகாரி இது தொடர்பாக முடிவு செய்திருக்கிறார். (இ-எ)

# வலைப்பந்தாட்ட இறுதிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜன. 31

அரியாலை ஐக்கிய கழகத்தால் 'திருக்குமரன்' வெற்றிக்கிண்ணத்துக்காக நடத்தப்படும் வலைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி நாளை சனிக்கிழமை பிற்பகல் 3-30 மணியளவில் அரியாலை நிருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் தெல்லிப்பழை கிறாஸ்கொப்பர்ஸ் வி. கழக அணியும், அரியாலை ஐக்கிய கழக அணியும் மோதுகின்றன. [த-3]

# நினைவு தின விழா

யாழ்ப்பாணம், ஜன. 31

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் தாபகர் வை. தாமோதரம்பிள்ளையின் நினைவு தின விழா கடந்த திங்கட்கிழமை கல்லூரியின் அருணாசலம் மண்டபத்தில் நடைபெற்றது.

யாழ். பிரதேசக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. சுந்தரலிங்கம், தாமோதரம்பிள்ளையின் திருவுருவப் படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார். யாழ். பல்கலைக்கழக முதுநிலை வரலாற்றுத்துறை [illegible] திரு. ச. சத்தியசீலன் நினைவுப் பேருரை வழங்கினார். [த]

**ஐ. நா. பாதுகாப்புச் சபை கூட்டம்:**

# இந்தியப் பிரதமர் ராவ் நியூயோர்க் பயணமானார்

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் பி. வி. நரசிம்மராவ் நேற்றுப் பிற்பகல் புதுடில்லியில் இருந்து நியூயோர்க்குப் புறப்பட்டுச் சென்றார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை பிரதமர் நரசிம்மராவ் நேற்று [வியாழக்கிழமை] இரவு சந்தித்துப் பேச இருந்தார்.

உலக அளவில் ஏற்பட்டுள்ள பல்வேறு மாற்றங்கள் குறித்து புஷ்ஷும் நரசிம்மராவும் நேற்று இரவு விரிவாக விவாதிக்க இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. [ஒ-எ]

# சரித்திரச் சிறப்புமிக்க ஐ. நா. சபை கூட்டம் இன்று

## யெல்ட்சினும் பங்குபற்றுவார்

ஐ. நா. பாதுகாப்புச் சபையின் சரித்திரச் சிறப்புமிக்க கூட்டம் இன்று [வெள்ளிக்கிழமை] ஐ. நா. தலைமை அலுவலகத்தில் கூடுகிறது.

பாதுகாப்புச் சபையின் இம்மாதத்திய தலைவர் பதவியை பிரிட்டன் வகிப்பதால், இன்றைய கூட்டத்திற்கு பிரிட்டிஷ் பிரதமர் ஜோன் மேஜர் தலைமை வகிக்கின்றார்.

திரு. மேஜரின் வேண்டுகோளின் மீதே இன்றைய கூட்டம் அழைக்கப்பட்டிருக்கிறது.

பாதுகாப்புச் சபையின் ஐந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஒன்றான சோவியத் யூனியன் மறைந்த பின்னர் அதன் இடத்தைப் பெற்றுக் கொண்ட ரஷ்யாவின் சார்பில் ஜனாதிபதி பொரிஸ் யெல்ட்சின் இன்றைய கூட்டத்தில் கலந்து கொள்கிறார். [ஒ-எ]

**போலி பாஸ்போர்ட் தயாரிப்பு:**

# 20 இலங்கையர்கள் தாய்லாந்தில் கைதாகினர்

போலி பாஸ்போர்ட்டுகள் தயாரித்ததற்காக இலங்கையைச் சேர்ந்த 20 பேரை தாய்லாந்துப் பொலீஸார் கைது செய்திருக்கின்றார்கள் என்று அறிவிக்கப்படுகின்றது.

கனடா, சுவிற்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு ஆட்களை அனுப்பிவைப்பதற்காகத் தயாரிக்கப்பட்ட போலி விஸாக்களையும் தாய்லாந்துப் பொலீஸார் கைப்பற்றினர் என்று தெரிவிக்கப்படுகிறது.

56 போலிப் பாஸ்போர்ட்டுகள் பறிமுதல் செய்யப்பட்டன என்றும் விமான டிக்கட்களும் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-எ)

**சனி, ஞாயிறு தவிர்ந்த**

# கிழமை நாட்களில் வரும் விடுமுறையிலும் பாடசாலை

## நாளை முதல் புதிய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜன. 31

நாளை முதலாம் திகதி தொடக்கம் கிழமை நாட்களில் வரும் சகல விடுமுறை தினங்களும் பதில் பாடசாலை நாட்களாக இருக்கும் என யாழ். கல்வி அலுவலகம் அறிவித்துள்ளது.

கடந்த 90, 91 ஆம் ஆண்டுகளில் பல்வேறு நெருக்கடிகள் காரணமாக பாடசாலை நாட்களை இழந்து பாட அலகுகளைப் பூர்த்தி செய்யமுடியாமற் போன நிலைமையை பலரும் சுட்டிக் காட்டியதை அடுத்து—

இந்த ஆண்டிலும் அவ்வாறான நிலை ஏற்படாமல் தடுக்கும் பொருட்டு இந்த முடிவு எடுக்கப்பட்டதாக கல்வி அலுவலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இது சம்பந்தமான மேலதிக விவரங்களை பெற, சகல பாடசாலை அதிபர்களும் தமக்குரிய கோட்டங்களின் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். [உ-5]

# ஒய்வூதியம் கிடையாதோர் விண்ணப்பிக்க அறிவுறுத்து

கொழும்பு, ஜன. 31

வட மாநில ஒய்வூதியர்கள் சங்கங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள் அண்மையில் ஒய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரைச் சந்தித்து யாழ்ப்பாண தீபகற்பத்திலுள்ள ஒய்வூதியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிக் கலந்துரையாடினர்.

ஒய்வூதியம் வழங்குவதில் தாமதம், சகல ஒய்வூதியர்களுக்குமான ரூபா 200, மற்றும் ரூபா 100 மேலதிக அலவன்ஸ் கொடுப்பனவுகள் போன்ற விடயங்கள் உட்பட பல விடயங்கள் இக் கலந்துரையாடலில் இடம்பெற்றன.

இவை தொடர்பாக உடனடி நவடிக்கை எடுப்பதாக பணிப்பாளர் உறுதி அளித்திருந்தார்.

இதேவேளை—

1991 அக்டோபர் மாதம் 13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஒய்வூதியம் பெற்றவர்களும், இதுவரை இறுதி ஒய்வூதியம் பெறாத அரச ஊழியர்களும் தங்கள் நிலைமை தொடர்பாக இன்று 31 ஆம் திகதிக்கு முன்னர் ஒய்வூதியத் திணைக்களம், நஷனல் மியூச்சுவல் கட்டடம், சத்தாம் வீதி, கொழும்பு - 1 என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கலாம் என்று ஒய்வூதியர் பணிப்பாளர் பகிரங்க அறிவித்தல் ஒன்றின் மூலம் கொழும்பில் தெரிவித்திருந்தார். [த]

# மரண அறிவித்தல்கள்

## திருமதி அன்னலக்ஷ்மி - வினாசித்தம்பி

வண்ணார்பண்ணை ஐயனார் கோவிலடியைச் சேர்ந்த திருமதி அன்னலக்ஷ்மி - வினாசித்தம்பி 29-1-92 அன்று காலமானார். இவர் காலஞ் சென்ற அம்பலவாணர் - வினாசித்தம்பி (சங்குவேலி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான கந்தையா துரைசாமி, திருமதி தையல் நாயகி ஆகியோரின் அன்பு மகளும், காலஞ் சென்ற விமலா தேவி, திருமதி சரோஜினிதேவி துரைராசா (மேலதிக உப பிரதி அதிபர், இராமநாதன் கல்லூரி), இராசேந்திரா (பொறியியலாளர், பிறவுண் அன் கொம்பனி), ஜெயேந்திரா (பாரிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சி. துரைராசா (அதிபர், ஆனைப்பந்தி- குருநாத சுவாமி வித்தியாலயம்) திருமதி ரோகினி இராசேந்திரா ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சி. கனகலக்ஷ்மி, து. சீனிவாசகம் (இளைப்பாறிய முகாமையாளர், நெல் சந்தைப்படுத்தும் சபை), திருமதி கு. தனபாக்கியலக்ஷ்மி, திருமதி. இ. ஜெயலக்ஷ்மி, சபாபதிப்பிள்ளை, திருமதி. க. சறோஜினிதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வி கௌரி, கரன், மௌலி, தாரணி, அச்சுதன் ஆகியோரின் பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
**திரு. சி. துரைராசா.**
**(மருமகன்)**

90, ஐயனார் கோயில் வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(சி/1374)

## செல்வி கந்தசாமி மாலதி

நாரந்தனை வடக்கு ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்ட, காலஞ்சென்ற பிஸ்கால் கந்தப்புவின் அருமைப்பேத்தியும், கந்தப்பு கந்தசாமி - ஸ்ரீதேவி தம்பதியினரது சிரேஷ்ட புதல்வியுமான செல்வி க. மாலதி (புனித அந்தோனியார் கல்லூரி உயர் வகுப்பு வர்த்தகப் பிரிவு மாணவி) 30-1-1992 அன்று அகால மரணமாகிவிட்டார்.

இறுதிக் கிரியைகள் வெள்ளிக்கிழமை 31-1-1992 அன்று காலை 11-00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பயன் மணல் மயானத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தகவல்:
**க. பேரின்பநாதன்**

பிட்டாரி கோவிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

[19541]

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 31-1-1992 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org